# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:**171/மா/2024

**நாள்:** 20. 02.2026

இரா தீபக் விக்ராந்த்,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–8,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–107, கோல்டன் ஜார்ஜ் நகர், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை, ஸ்ரீமஹாலட்சுமி மந்திரா அடுக்ககம், பிளாக் 1, B விங், கதவு எண்.1405 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா.தீபக் விக்ராந்த் என்பவரின் 30.08.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2024 அன்று பெறப்பட்டு 171/மா/2024 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–107, கோல்டன் ஜார்ஜ் நகர், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை, ஸ்ரீமஹாலட்சுமி மந்திரா அடுக்ககம், பிளாக் 1, B விங், கதவு எண்.1405 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா.தீபக் விக்ராந்த் என்பவர் தனது 30.08.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "Vijaya Tower, Palmshore (Stilt + Five Floors), நல்லி சில்க்ஸ் பின்புறம் AA Block, 3rd Street, 3rd Main Road corner building, Anna Nagar, Greater Chennai Corporation, Ward No.103, Zone-8, T.S. No.134, Old S. No.7/1Pt, Block No.001D, Ward-001. Taluk-Aminjikarai, Village / Town-Naduvankarai Stilt + 5 தளங்களுடன் கூடிய கட்டிடமானது திட்ட மற்றும் கட்டிட அனுமதி பெறாமல் விதி மீறல்களுடன் கட்டப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி பெறப்படவில்லை. மேற்கண்ட அங்கீகாரமில்லாத சட்ட விரோத கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு பல புகார் மனுக்களை அனுப்பியுள்ளேன்.

முதல் புகார் எண் 2024–702POJ 14th JAN 2024.

எனது இணைய வழி புகாரானது அண்ணா நகர் மண்டலத்தின் மண்டல அலுவலர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், வார்டு 103 உதவி பொறியாளர் வரை அனைவரிடமும் சென்று சேர்ந்து விட்டது. வார்டு 103 உதவி பொறியாளரிடம் மட்டும் 16 முறை சென்று விட்டது. மேற்கண்ட விதிமீறல் கட்டிடம் இருக்கும் அதே சாலையில் அலுவலகம் இருக்கும் வார்டு 103 உதவி பொறியாளர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இரண்டாவது புகார் நாள் 27.05.2024

1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்.

2. ENFORCEMENT CELL, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்.

3. ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி

4. வட்டார துணை ஆணையாளர், மத்திய வட்டார துணை ஆணையாளர் அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி

5. மண்டல அலுவலர், அண்ணா நகர் மண்டலம், மண்டலம்–8, பெருநகர சென்னை மாநகராட்சி

மூன்றாவது புகார் எண் 2024–216HCA நாள் 28th AUG 2024.

எனது இணைய வழி புகாரானது அண்ணா நகர் மண்டலத்தின் வார்டு 103 உதவி பொறியாளரிடம் தற்போது உள்ளது. .

PRAYER

மேற்கண்ட எனது ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாவது புகார்கள் மீது இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட விதிமீறல் கட்டிடம் இருக்கும் அதே சாலையில் அலுவலகம் இருக்கும் வார்டு 103 உதவி பொறியாளர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு வார்டு 103 உதவி பொறியாளர் தனது உத்தியோகபூர்வ (Official Duty) கடமையை செய்ய தவறியதே ஆகும்.

இனியும் காலம் தாழ்த்தாமல் மேற்கண்ட விதிமீறல் கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்க வார்டு 103 உதவி பொறியாளர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இதுவரை எனது புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத, வார்டு 103 உதவி பொறியாளர் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 30.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்படாததால் 02.04.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டும் அறிக்கை பெறப்படவில்லை.

3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் முதுநிலை உதவி ஆணையர் 29.12.2025 நாளிட்ட தனது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, பகுதி–22, கோட்டம்–103ல் உள்ள விஜயா டவர்ஸ் பார்ம் ஷோர் (Vijaya Tower, Palmshore) நல்லி சில்க்ஸ் பின்புறம், AA பிளாக், 3வது தெரு, 3வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை–40 என்ற முகவரியில் உள்ள கட்டிடமானது திட்ட மற்றும் கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்று மேற்கண்ட அங்கீகாரமில்லாத சட்ட விரோத கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க திரு. தீபக் விக்ராந்த் அவர்கள் அளித்த புகார் மனு பெறப்பட்டது. இக்கட்டிடத்திற்கு கடந்த 15.09.2023 அன்று கட்டிட திட்ட அனுமதி மற்றும் வரைப்படம் நகல் கேட்டு தாக்கீது வழங்கப்பட்டது.

மேலும் இது தொடர்பாக கடந்த 29.10.2024 அன்று பூட்டி சீல் வைக்கும் (Lock and Seal Notice) தாக்கீது வழங்கப்பட்டது. மேலும் தாக்கீது வழங்கிய பின் 14.02.2025 கட்டிட வரைபடம் (PPA/WDC08/020050/2012) நகல் உரிமையாளரிடம் இருந்து பெறப்பட்டது. மேலும் கடந்த 29.10.2024 அன்று வழங்கப்பட்ட பூட்டி சீல் வைக்கும் (Lock and Seal Notice) தாக்கீது கட்டிட திட்ட அனுமதி மற்றும் வரைபடம் பெறாமல் முழுவதும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் என வழங்கப்பட்டது.

மேலும் கட்டிடம் வரைபடம் நகல் கொண்டு கட்டிடத்தை ஒப்பிட்டு களஆய்வு செய்து புதிய பூட்டி சீல் வைக்கும் (Lock and Seal Notice) தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.” எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் 29.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. விசாரணை தொடர்பாக மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் இளநிலை பொறியாளர் 29.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தை கள ஆய்வு செய்யப்பட்டு கட்டிடத்தின் உரிமையாளருக்கு 15.09.2023 அன்று கட்டிட திட்ட அனுமதி மற்றும் வரைபடம் நகல் கேட்டு தாக்கீது வழங்கப்பட்டது.

கட்டிட திட்ட அனுமதி மற்றும் வரைபடம் பெறாமல் முழுவதும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் கட்டப்பட்டு இருந்ததால் 29.10.2024 அன்று பூட்டி சீல் வைக்கும் (Lock & Seal Notice) தாக்கீது வழங்கப்பட்டது. தாக்கீது வழங்கியபின் 14.02.2025 கட்டிட வரைபடம் (PPA/WDC08/020050/2012) நகல் உரிமையாளரிடம் இருந்து பெறப்பட்டது.

மேலும், கட்டிடம் வரைபடம் நகல் கொண்டு கட்டிடத்தை ஒப்பிட்டு கள ஆய்வு செய்தபின் பூட்டி சீல் வைக்கும் (Lock & Seal Notice) புதிய தாக்கீது வழங்கப்படும் மற்றும் சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.”

7. இந்நிலையில், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி இணை இயக்குநர்/ முதுநிலை உதவி ஆணையர் தனது 03.01.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, பகுதி–22, கோட்டம்–103ல் உள்ள விஜயா டவர்ஸ் பாள்ம் ஷோர் (Vijaya Tower, Palmshore) நல்லி சில்க்ஸ் பின்புறம், AA பிளாக், 3வது தெரு, 3வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை–40 என்ற முகவரியில் உள்ள கட்டிடமானது திட்ட மற்றும் கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்று மேற்கண்ட அங்கீகாரமில்லாத சட்ட விரோத கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க திரு. தீபக் விக்ராந்த் அவர்கள் அளித்த புகார் மனு பெறப்பட்டது. இக்கட்டிடத்திற்கு கடந்த

15.09.2023 அன்று கட்டிட திட்ட அனுமதி மற்றும் வரைப்படம் நகல் கேட்டு தாக்கீது வழங்கப்பட்டது.

இது தொடர்பாக கடந்த 29.10.2024 அன்று பூட்டி சீல் வைக்கும் (Lock and Seal Notice) தாக்கீது வழங்கப்பட்டது. மேலும் தாக்கீது வழங்கிய பின் 14.02.2025 கட்டிட வரைபடம் (PPA/WDC08/020050/2012) நகல் உரிமையாளரிடம் இருந்து பெறப்பட்டது. மேலும் வழக்கறிஞர் திரு. தீபக் விக்ராந்த் அவர்கள் அளித்த புகாரினை திரும்ப பெறுவதாக தெரிவித்து தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அலுவலகத்திற்கு அளித்த கடிதத்தின் நகல் மண்டலம்–8 அலுவலகத்திற்கு தபால் மூலம் பெறப்பட்டது என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மேற்கண்ட கட்டிடத்தின் மீது வரைப்படம் அனுமதி பெறப்பட்டுள்ளது. விதிமீறல் இருக்கும்பட்சத்தில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் முதுநிலை உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் கடிதம், இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, பகுதி–22, கோட்டம்–103ல் உள்ள விஜயா டவர்ஸ் பார்ம் ஷோர் (Vijaya Tower, Palmshore) நல்லி சில்க்ஸ் பின்புறம், AA பிளாக், 3வது தெரு, 3வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை–40 என்ற முகவரியில் உள்ள Stilt + 5 தளங்களுடன் கூடிய கட்டிடமானது, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி பெறாமல் விதி மீறல்களுடன் கட்டப்பட்டுள்ளது என்பதும், இக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு புகார்கள் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், மேற்கண்ட விதிமீறல் கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்க வார்டு 103 உதவி பொறியாளருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும், தன்னுடைய மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காத வார்டு எண் 103 உதவி பொறியாளர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, அண்ணா நகர், சென்னை–40. பகுதி–22, கோட்டம்–103ல் உள்ள விஜயா டவர்ஸ் பார்ம் ஷோர் (Vijaya Tower, Palmshore) நல்லி சில்க்ஸ் பின்புறம், AA பிளாக், 3வது தெரு, 3வது பிரதான சாலை, என்ற முகவரியில் உள்ள Stilt + 5 தளங்களுடன் கூடிய கட்டிடத்தை கள ஆய்வு செய்யப்பட்டு கட்டிடத்தின் உரிமையாளருக்கு 15.09.2023 அன்று கட்டிட திட்ட அனுமதி மற்றும் வரைபட நகல் கேட்டு தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், கட்டிட திட்ட அனுமதி மற்றும் வரைபடம் பெறாமல் முழுவதும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் கட்டப்பட்டு இருந்ததால் 29.10.2024 அன்று பூட்டி சீல் வைக்கும் (Lock & Seal Notice) தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், தாக்கீது வழங்கியபின் 14.02.2025 கட்டிட வரைபடம் (PPA/WDC08/020050/2012) நகல் உரிமையாளரிடம் இருந்து பெறப்பட்டது என்பதும், மனுதாரர் திரு. தீபக் விக்ராந்த் அவர்கள் அளித்த புகாரினை திரும்ப பெறுவதாக தெரிவித்து தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அலுவலகத்திற்கு அளித்த கடிதத்தின் நகல் மண்டலம்–8 அலுவலகத்திற்கு தபால் மூலம் பெறப்பட்டது என்பதும், விதிமீறல் இருக்கும்பட்சத்தில் மாநகராட்சியால் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் முதுநிலை உதவி ஆணையரின் அறிக்கை, கடிதம் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் முதுநிலை உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தின் வரைபடத்தினை கொண்டு கட்டப்பட்ட கட்டிடத்தை ஒப்பிட்டு பார்த்து, கள ஆய்வு செய்தபின் உரிய சட்டபூர்வமான தாக்கீது வழங்கப்படும் என்று தெரிவித்துள்ள நிலையில், மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–க்கு அனுப்பியுள்ள இம்முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்ட 27.12.2025 நாளிட்ட கடிதத்தில், திட்ட அனுமதிக்கேற்ப கட்டிடத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுவிட்டதால் தனது புகார் மனுவினை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்து இருந்த போதிலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8, வார்டு 103, 3வது சாலை, 3வது பிரதான சாலை கார்னரில் அமைந்துள்ள Vijaya Tower Palmshore கட்டிடத்தின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட வரைபடத்தின்படி மேற்கண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்பதையும் சட்ட விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் முதுநிலை உதவி ஆணையர் கள ஆய்வில் உறுதி செய்யவும், அவ்வாறு இல்லையெனில் மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதி மன்ற வழிகாட்டுதல்கள்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு 15 தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறு, பெருநகர சென்னை மரநகராட்சி மண்டலம் 8ன் உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. இரா.தீபக் விக்ராந்த்,
கதவு எண்.1405, பிளாக் 1, B விங்,
ஸ்ரீமஹாலட்சுமி மந்திரா அடுக்ககம்,
நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை,
கோல்டன் ஜார்ஜ் நகர், சென்னை–600 107.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
36பி, புல்லா அவின்யூ, செனாய் நகர்,
சென்னை–600 030.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.